**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**
**முன்னிலை: திருமதி.பி.கே. தமயந்தி,எம்,ஏ.,பி.ல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

2022 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் புதன்கிழமை

<u>இ.ம.எண். 4/2022 இன் அ.வ.எண்.410/2020</u>

1. தங்கராசு
2. ஜெயலட்சுமி
3. பிரேமா
4. சுப்பரமணி
5. ஆறுமுகம்
6. மாரியாயி
7. சம்பூர்ணம் ... மனுதாரர்கள்/1 முதல்6 & 8 பிரதிவாதிகள்

**//எதிராக//**

1. மணி
2. திருமலையம்மாள்
3. செல்வராஜ்
4. ராஜேந்திரன்
5. ஜெயக்கொடி
6. முத்துலட்சமி
7. பொன்னம்மாள்
8. மகாமுணி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பு 24.3.2022 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1 முதல்6 & 8 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.பூபாலன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.தேவராஜன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/1 முதல்6 & 8 பிரதிவாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்ட காரணங்களுக்காக அசல் தாவாவில் மனுதாரர்கள்/1 முதல்6 & 8 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 25.9.2019 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 -ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

நான் இம்மனுவில் 1 ம்மனுதாரர்/தாவாவில் 1 ம்பிரதிவாதி. எதிர்மனுதாரர்கள் /

வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும் அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு ஆஜராக வழக்கறிஞரை நியமனம் செய்திருந்ததாகவும், பின்னிட்டு தாவாவில் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டுமென வழக்கறிஞர் ஏற்கனவே மனுதாரர்களிடம் தெரிவித்திருந்தார் என்றும் மேற்படி அசல் வழக்கில் குறிப்பிட்டிருப்பது போல் பாகப்பிரிவினை செய்வதில் மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதால் மனுதாரர்கள் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றும் தற்பொழுது வாதிகள் மேற்படியார்களுக்கு மட்டும் தான் தாவா சொத்தில் பங்கு பாத்திய உரிமை ஏற்பட்டிருப்பதாகவும், மனுதாரர்களுக்கு எவ்வித பங்கினையும் ஒதுக்கீடு செய்ய போவதில்லை என ஊரில் பேசி வந்ததையடுத்து வழக்கறிஞரை சந்தித்து விவரம் கேட்ட போது தான் தாவாவில் மனுதாரர்களும் பதிலுரை தாக்கல் செய்து அவர்களுடைய பாகத்திற்குண்டான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தும் பட்சத்தில் மனுதாரர்களுக்கு பங்கு ஒதுக்கீடு செய்யப்படும் என தெரிவித்ததால் தாவாவில் மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்து கட்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆதலால் மேற்படி அசல் தாவாவில் மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக கட்நத 25.9.2019 தேதியில் பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச உத்தரிவினை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுப்புரை:</u>

மனுதாரரின் மனு சுத்தப் பொய்யும் மோசடியுமானது. இந்த எதிர்மனுதாரரால் உண்மையென்று ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு திருப்திகரமாய் ரூசு செய்ய வேண்டும். மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்காக தற்பொழுது நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் இம்மனுதாரர்கள் தாவா விசாரணையை காலதாமதப்படுத்தி இவ்வெதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு வீண் சிரமத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். இம்மனுவிற்காக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எதுவும் உண்மையல்ல. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்று எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

<u>4. இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால்</u>

<u>மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.</u>

மனுதாரர்கள்/1 முதல்6 & 8 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 25.09.2019 தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் / வாதிகள், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பெயரில் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் குறிப்பிட்டிருப்பது போல் பாகப்பிரிவினை செய்வதில் மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதால் மனுதாரர்கள் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றும் தற்பொழுது வாதிகள் மேற்படியார்களுக்கு மட்டும் தான் தாவா சொத்தில் பங்கு பாத்திய உரிமை ஏற்பட்டிருப்பதாகவும், மனுதாரர்களுக்கு எவ்வித பங்கினையும் ஒதுக்கீடு செய்ய போவதில்லை என ஊரில் பேசி வந்ததையடுத்து வழக்கறிஞரை சந்தித்து விவரம் கேட்ட போது தான் தாவாவில் மனுதாரர்களும் பதிலுரை தாக்கல் செய்து அவர்களுடைய பாகத்திற்குண்டான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தும் பட்சத்தில் மனுதாரர்களுக்கு பங்கு ஒதுக்கீடு செய்யப்படும் என தெரிவித்ததால் தாவாவில் மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்து கட்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆகவே மனுதாரர்களின் ஆஜரின்மையால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமென்றும் இல்லையெனில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையில் மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்காக தற்பொழுது நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் இம்மனுதாரர்கள் தாவா விசாரணையை காலதாமதப்படுத்தி இவ்வெதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு வீண் சிரமத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். ஆகவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கடந்த 25.09.2019 தேதியில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு பதிலுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்ததில், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் போதிய வாய்ப்பு கொடுத்தும் பதிலுரை தாக்கல்

செய்யப்படவில்லை என்பதற்காக 25.9.2019 அன்று மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்கள் / 1 முதல்6 & 8 பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு மற்றும் பிரமாண பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற போதும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மனுதாரர்கள் / 1 முதல்6 & 8 பிரதிவாதிகள் அவர்களது வாதத்தை எடுத்துரைக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு பாரபட்சம் ஏதும் ஏற்படாது என்பதாலும் இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனுவானது, மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.1000/- 13.04.2022 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2022 ம் வருடம் மார்ச் மாதம் 30 ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2022.03.31 10:17:09 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**1. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**

--இல்லை--

**2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**

--இல்லை--

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2022.03.31 10:17:18 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**